## ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக்குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

## Human Rights Commission of Sri Lanka

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4).

**Ranjith Uyangoda**
Secretary
Human Rights Commission of Sri Lanka

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

பகுதி 1 - 85.00

| குழுவினால் இனங்கண்டுகொள்ளப்பட்ட குறைபாடுகள் மற்றும் விசேட கவனம் ஈர்க்கப்பட வேண்டிய குறைபாடுகள் | குறைபாடுகளை சரி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ பரிந்துரைகளை அமுல்படுத்தல் / தற்போதைய நிலைமை |
|---|---|
| 1. அரசாங்க உத்தியோகத்தர்களின் கணக்கிற்கு முற்பணத் தொகைகளை உரிய தினமன்று சமர்ப்பிக்காமை | மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அரசாங்க உத்தியோகத்தர்கள் இல்லையென்பதோடு அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண “பி” கணக்கும் இல்லை. |
| 2. வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமை. | 2021 ஆம் ஆண்டு முதல் இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றது. |
| 3. 2017.06.26 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்திக்கமைய 2018 ஆம் ஆண்டுக்குரிய சொத்துக்கள் கொள்வனவு மற்றும் அகற்றுதல் சம்பந்தமான தகவல்களை கொம்ட்ரோலர் ஜெனரல் (Comptroller General) அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை. | 2022 ஆம் ஆண்டுடன் தொடர்பாக இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 4. அன்றாட ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் / அல்லது வாகனங்களுக்கான, குழாம் வாகனங்களுக்கான மாதாந்த பொழிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்காமை மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை | அன்றாட ஓட்டக் குறிப்புக்களின் மாதாந்த பொழிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 2016.12.29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய விசேட செலவுகள் பிரிவுக்குரிய வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டை மீளப் பரிசோதித்திருக்காமை. | 2020 ஆம் ஆண்டில் நிலவிய கொரோனா தொற்று நோய் நிலைமை காரணமாக எரிபொருள் பயன்பாடு தொடர்பான சோதனையை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன், தற்போது போதுமானளவு எரிபொருள் வழங்கப்படாமையின் காரணமாக எரிபொருள் பயன்பாடு தொடர்பான சோதனை மேற்கொள்ளப்படவில்லை. எரிபொருள் வழங்கல் சாதாரண நிலைமைக்கு வந்தவுடன் எரிபொருள் பயன்பாடு தொடர்பான சோதனை மேற்கொள்ளப்படும். |
| 5. 2022.09.13 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்காமை மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதியிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை. | 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2023.01.31 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதியிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

பகுதி 2 - 75.00

| | |
|---|---|
| 1. ஒட்டுமொத்த ஆளணியும் உள்ளடக்கப்படும் வகையில் செயலாற்றுகை ஒப்பந்தங்கள் வரையப்படவோ அல்லது உள்ளடக்கப்பட்டிருக்கவோ இல்லை. | இது சம்பந்தமாக பொது நிருவாக அமைச்சிடம் வினவியபோது அது செயற்பாட்டு நிலைமையில் இல்லாதிருப்பதாகவும், அதனை தயாரித்தல் சம்பந்தமாக எந்தவிதமான அறிவுறுத்தலும் கிடைக்கப்பெறவில்லையெனவும் குறிப்பிடுகின்றேன். |

Ranjith Uyangoda
Secretary
Human Rights Commission of Sri Lanka